

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி இளைஞரணி சார்பில் நடத்தப்படும் நூலகத்திற்கு மாணவர்கள்,பொதுமக்கள், பட்டதாரிகள் பயன்பெறும் வகையில் 1லட்சத்திற்கான புத்தகங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் வழங்கினார். நிகழ்வில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, அரு வடிவேல். ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனி குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முகம்மது ரபீக், ஆர்டிஸ்ட் முருகேசன், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (06.11.2024)வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்களை நியூசிலாந்திற்கான இந்தியதூதர் (Consul General designate to Consulate General of India, Auckland (New Zealand)) மதன் மோகன் சேதி (Mr.Madan Mohan Sethi) நேரில் சந்தித்து, தமிழ்நாட்டில் வேளாண்மை தொடர்பான திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் கோ.பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் துணை தலைவர் / மேலாண்மை இயக்குநர் ஜெ.ஜெயகாந்தன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) முருகேசன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) (ந.ப.தி) சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம் –

# மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி BLA2 ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை



தஞ்சை, நவ.8-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி BLA2 ஆய்வு கூட்டங்கள் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய மூன்று தொகுதிகளில் கீழ்க்கண்டவாறு மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழகங்களில் BLA2 ஆய்வு கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் அந்தந்த மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் ஆய்வு செய்ய உள்ளார்கள். அக்கூட்டத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளின் BLA2க்களை ஒருங்கிணைப்பதுடன் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள் கூட்டம் நடைபெற உரிய ஏற்பாடுகள் செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடைமருதூர்தொகுதி யில் தொகுதி பார்வையாளர் ந.செந்தில் தலைமையில் 09.11.2024 காலை 10 மணிக்கு திருவிடை மருதூர் கலைஞர் பாசறையில் திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம், திருவிடைமருதூர் பேரூர், ஆடுதுறை பேரூர், திருபுவனம் பேரூர், வேப்பத்தூர் பேரூர். மாலை 04.00 மணிக்கு நாச்சியார் கோவில் நீலாவதி திருமண மண்டபத்தில் திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியம், 10.11.2024 காலை 09.00 மணிக்கு திருப்பனந்தாள் கலைஞர் பாசறையில் திருப்பனந்தாள் மேற்கு, திருப்பனந்தாள் பேரூர், கும்பகோணம் கிழக்கு, மத்திய ஒன்றியம் (6 ஊராட்சிகள்). 10.30 மணிக்கு கீழக்காட்டூர் சமுதாயக்கூடத்தில் திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம். பந்தநல்லூர் டைமண்ட் மஹாலில் திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றிய கூட்டங்கள் நடைபெறும்.

கும்பகோணம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தொகுதி பார்வையாளர் கே.மறைமலை தலைமையில் 09.11.2024 காலை 09.00 மணிக்கு பம்பப்படையூர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு திருமண மண்டபத்தில் கும்பகோணம் கிழக்கு ஒன்றியம், சோழபுரம் பேரூர், காலை 10.00 மணிக்கு கும்பகோணம் மத்திய ஒன்றியம், காலை 11.00 மணிக்கு கும்பகோணம் மேற்கு ஒன்றியம், திருநாகேஷ்வரம் பேரூர், அதனை தொடர்ந்து 10.11.2024 அன்று கும்பகோணம் அண்ணா அரண் மனையில், ( மாநகரக் கழக அலவலகம்) காலை 9.30 மணிக்கு கும்பகோணத் பகுதி 1, 11.30 மணிக்கு மாநகர பகுதி 2, மாலை 04.00 மணிக்கு மாநகர பகுதி 3. மாலை 06.00 மணிக்கு மாநகர பகுதி 4 கூட்டங்கள் நடைபெறும்.

பாபநாசம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.எம்.ஆனந்த் தலைமையில் 10.11.2024 காலை 09.00 மணிக்கு பாபநாசம் பேரூர்க் கழக அலுவலகத்தில் பாபநாசம் தெற்கு ஒன்றியம், பாபநாசம் பேரூர், காலை 10.00 மணிக்கு கும்பகோணம் மேற்கு ஒன்றியம். காலை 11.30 மணிக்கு கபிஸ்தலம் ஆனந்தம் மஹாலில், பாபநாசம் வடக்கு ஒன்றியம், அய்யம் பேட்டை பேரூர். மதியம் 03.00 மணிக்கு அம்மாபேட்டை பேரூர் கழக அலுவலகத்தில் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், அம்மாபேட்டை பேரூர், மெலட்டூர் பேரூர், மாலை 04.00 மணிக்கு அம்மாபேட்டை ஒன்றியக் கழக அலுவலகத்தில் அம்மாபேட்டை தெற்கு ஒன்றியத்திற்கும் நடைபெற உள்ளது.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் சொரனூரில் ரெயில் மோதி சேலம் அயோத்தியாப்பட்டணம் அருகே உள்ள அடிமலை புதூர் பகுதியைச் சேர்ந்த துப்புரவு பணியாளர்கள் லட்சுமணன் வள்ளி தம்பதி மற்றும் மற்றொரு லட்சுமணன் ராணி தம்பதி ஆகியோர் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களது உடல் பிரேத பரிசோதனைக்கு பின் சொந்த ஊருக்குக் கொண்டு வரப்பட்டு இறுதி சடங்கு செய்யப்பட்டது. இதனையடுத்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன் தனது பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் வழங்க உத்தர விட்டுள்ளார். இதையடுத்து சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ரெயில் விபத்தில் இறந்த 4 பேரின் உறவினர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார் . அப்போது கள்ளக்குறிச்சி தொகுதி எம்.பி. மலையரசன், அயோத்தியாப்பட்டணம் ஒன்றிய செயலாளர்கள் ஏ. விஜயகுமார், ரத்தினவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# திருச்செங்கோடு தொகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் - வி.சி.சந்திரகுமார் பங்கேற்பு

நாமக்கல், நவ. 8 -

திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் ஒன்றியம், மல்ல சமுத்திரம் பேரூர், எலச்சி பாளையம் மேற்கு ஒன்றியம், திருச்செங்கோடு ஒன்றியம் மற்றும் திருச் செங் கோடு நகரத்தில் பாக முகவர்களுக்கு வருகின்ற நவம்பர் 16, 17 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் நீக்கல் முகாம் குறித்து ஆலோசனைக்கூட்டம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் திருச்செங்கோடு தொகுதி பொறுப்பாளரான சேலம் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அ.சீனிவாசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர்கள் கு.பழனிவேல், கே.செல்வராசு, ஜி.தங்கவேல், பேரூர் கழக செயலாளர் மு.திருமலை, நகர கழக செயலாளர் டி.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிபாளையம் நகர பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நகர கழக அலுவலகத்தில், மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் குமாரபாளையம் தொகுதி பொறுப்பாளரான மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில், நகர கழக செயலாளர் அ.குமார் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டங்களில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் பேசுகையில் பாகமுகவர்கள் அனைவரும் வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் முகாமில் கலந்து கொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களையும், புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும் என கேட்டுக் கொண்டார். இக்கூட்டங்களில் பேரூராட்சிமன்ற தலைவர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சுண்டப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

# ஆசிரியர் அந்தோணி ஜெரால்ட் மறைவு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி இரங்கல்



ஈரோடு,நவ.8-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

ஈரோடு மாவட்டம் அந்தியூர், சுண்டப்பூர் மலைக் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பணி புரிந்த ஆசிரியர் அந்தோணி ஜெரால்ட் அவர்கள் இறந்த செய்தி, அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது.

மலைக்கிராமத்தில் வசிக்கும் குழந்தைகளின் கல்விக்காக ஆசிரியர் பணியேற்று உழைத்த அந்தோணி ஜெரால்ட் அவர்கள் வகுப்பறையிலேயே தன் கடைசி மூச்சையும் இழந்துள்ளார்.

அவரை இழந்து தவிக்கும் மாணவர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவரின் ஆசிரியர் பணியால் பல அறிஞர்கள் தோன்றுவார்கள். அவரின் நினைவைப் போற்றுவார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் தெற்கு ஒன்றியம் மற்றும் அன்னவாசல் பேரூர் பாக முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட பொருளாளர் புதுக்கோட்டை துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், பேரூர் செயலாளர் எம். எஸ்.ஏ.முகமது ரிசா ஆகியோர் முன்னிலையில் அன்னவாசல் அண்ணா மண்டபத்தில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக மருத்துவரணி துணை செயலாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி தேர்தலில் கழகம் வெற்றி பெற வழிமுறைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டாக்டர் கே.என்.அமானுல்லா, சுந்தர்ராஜ், பெருமாநாடு நிஜாம், மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றனர்.

